
# திறவுகோல்

2052 மார்கழி
மாத இதழ்



வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு சேல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# பாசுபரசும் பழைய நினைப்பும்...

அப்போ நான் பள்ளியில் படிச்சிட்டு இருந்தேன்..

எங்களோட பழைய வீட்டை இடித்துவிட்டு புதுசா வீடு கட்ட ஆரம்பிச்சோம், அதனால பக்கத்துல கொஞ்ச தூரத்துல தற்காலிகமா ஒரு வாடகை வீட்டில் குடியேறினோம். அந்த வீடு இருந்த இடம் ரம்மியமான ஆற்றுப்படுகை, ஆறுன்னு ஒன்னு இருந்தா அதுக்கு பல சின்ன சின்ன கிளைவாய்க்கால்கள் இருக்கும், அது போல இருக்குற ஒரு சின்ன வாய்க்கால் பக்கத்துல எங்க வீடு.

இந்த வீடு எப்படி இருக்கும்ன்னு சொல்லனும்னா..

எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் பிறந்த குழந்தைகளுக்கு மட்டுமே பரிச்சயமான பொங்கல் வாழ்த்து அட்டைகளில் இயற்கை எழில் கொஞ்சும் வண்ண ஓவியங்கள் இருக்குமே அதுபோல ஒரு அழகிய கூரைவீடு. அழகுனா ஆபத்து இல்லாமலா? பாம்புகள் இரை தேடி பலமுறை வீட்டிற்குள் நுழைந்துவிடும். ஆரம்பகாலங்களில் மிகவும் பயமாய் தான் இருந்தது, பிறகு பழகிவிட்டது. பாம்புகளை லாவகமாக வீட்டை விட்டு வெளியே துரத்த கற்றுகொண்ட பிறகு பயம் போய்விட்டது.

இப்படியாய் நகர்ந்து கொண்டிருந்த நாட்களுக்கு நடுவே ஊருக்குள் ஒரு வதந்தி பரவியது. "சாலையோர கூரை வீடுகள் திடீரென தானாக பற்றி எரிகிறது" என்றும். இதற்கு என்ன காரணம் என்றும் தெரியவில்லை என்பது தான் அந்த வதந்தி.

டீ கடை முதல் மீன் கடை வரை இது தான் பேச்சு. எங்கள் வீட்டின் சுற்றுப்புறத்திலும் அதிகமாக கூரைவீடு இருந்ததால், எங்கள் தெருவில் உள்ள நண்பர்களெல்லாம் கூடிப்பேசி, இரவில் கண்விழித்து பாதுகாப்பது என்று முடிவெடுத்து அதை செயல்படுத்தவும் தொடங்கினோம்.

ஆஹா! அந்த அனுபவமே தனி. அர்த்த ராத்திரியில் நண்பர்களோடு அரட்டை அடித்துகொண்டு வீதி உலா வருவோம். நாங்கள் சோர்வடையாமல் இருக்க சில வீடுகளில் டீ காபி போட்டு தருவார்கள். அதையும் குடித்து விட்டு விடிய விடிய கதை அடித்துவிட்டு விடியற்காலையில் தூங்க செல்வோம்.

இப்படியே ஐந்து ஆறு நாட்கள் செல்ல எங்கள் பகுதியில் சந்தேகப்படும் படியான எந்த செயல்பாடுகளும் இல்லாததாலும், சரியான தூக்கமில்லாததாலும் எங்களுக்கு சோர்வும் அலுப்பும் ஏற்பட தொடங்கியபோது தான் அவர் வந்தார். இளநிலை

வேதியல் படித்துக்கொண்டிருந்த எங்கள் தெருவாசி. அன்று அவரும் எங்களோடு காவல்பணியில் கலந்துகொண்டார்.

நாங்களும் வழக்கம் போல ஒருமுறை எங்கள் பகுதியை சுற்றிவந்து ஒரு இடத்தில் அமர்ந்து அரட்டையை தொடங்க பேச்சு எங்கெங்கோ சென்று இறுதியாக என் நண்பன் ஒருவன்

"அது எப்படிங்க நெருப்பு தானா எரியும்?" என கேட்க, அதற்கு அந்த புதியவர், ஏன் எரியாது பாசுபரசுன்னு ஒரு வேதிப்பொருள் இருக்கு அது தீப்பற்றி எரிய இப்போதுள்ள காற்றின் வெப்பநிலையே போதும் தம்பி, அதுனால தான் அதை ஆய்வகத்தில் தண்ணீருக்குள் பாதுகாப்பாய் வைப்பார்கள்.

"இதை விட சுவாரசியம் சொல்லனும்னா, பில்லி, சூனியம் எடுக்குறோம்னு சொல்ற பல போலி சாமியார்கள், வரும் பக்தர்கள் கையில் மாட்டு சாணி உருண்டையை கொடுப்பார்கள். நம் வீட்டிலெல்லாம் மார்கழி மாதத்தில் கோலம் போட்டு நடுவுல வைப்போமே, அது போல ஒரு மாட்டு சாணி உருண்டையை கொடுத்து உச்சி வெயிலில் வைக்க சொல்வார்கள். சாணியில் உள்ள ஈரப்பதம் காய்ந்து வரட்டியாக மாறும் போது தானாக பற்றி எரியும். அப்படி எரிந்தால் உன்னை பிடித்த எல்லா பில்லி சூனியமும் விலகும் என்று சொல்வார்கள்.

அதுவும் எரியும் அதற்கு காரணம் போலி சாமியார்கள் அதற்குள் மறைத்து வைத்திருக்கும் பாசுபரசு தான் காரணம், என்று பக்தர்களுக்கு தெரியாதே" என்று அவர் சொல்ல நாங்கள் வியப்பு மாறாமல் அவரை பார்த்துக் கொண்டிருந்தோம், அதற்குள் வேறு ஒரு நண்பன் "அப்படியானால் இப்போது நடக்கும் இந்த குடிசைகள் எரியும் சம்பவங்களுக்கு இதுபோன்ற சாணி உருண்டைகள் தான் காரணமாய் இருக்குமோ, நமது எதிரி நாட்டு தீவிரவாதிகளின் புதிய தாக்குதலாக இருக்குமோ" என்று அவனின் கற்பனை குதிரையை விபரீதமாக தட்டிவிட, நாங்கள் எல்லாம் உரக்கச் சிரித்தோம்..

அன்று எங்களுக்கு பாஸ்பரசு பாடம் எடுத்த அண்ணன் இன்று ஒரு சிறந்த பள்ளியின் முதல்வராக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

நினைவுகள் நீளும்..



–
மன்னை ராஜேஷ்.

# பசிப் பணி

எதுவுமே சாப்பிடாம போறியே...
கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு
போப்பா.....

என்ற அம்மாவிடம்
நேரமாச்சும்மா...

வந்து சாப்பிடுறேன்
என்று சொல்லிவிட்டு
பைக்கை வேகமாக
ஓட்டிச் சென்று
உணவகம் முன் நிறுத்திவிட்டு
தனக்கான பார்சல்களை
எடுத்து வண்டியில்
வைத்துக்கொண்டு
மீண்டும் வண்டியை
ஓட்டிச்சென்றவனை
சிக்னல் தடுத்து நிறுத்திட

ஹலோ..... சொல்லுங்க மேடம்
இதோ அஞ்சு நிமிசத்துல
வந்திடுறேன் என்றுக்
கூறி கைப்பேசியை
அணைத்து பாக்கெட்டில்
செருகிக்கொண்டு வேகமாக
சென்று அந்த
வீட்டின் அழைப்பு மணியை
அழுத்தியதும், கதவைத்
திறந்தவுடன்

ஏம்ப்பா.... வீட்டில் எல்லாரும்
பசியோடு
இருக்காங்க.
சொன்ன
நேரத்துல வந்து
கொடுக்க மாட்டியா
என கடிந்துக் கொண்ட
அந்த அம்மாவிடம்
மன்னிச்சிடுங்க...

இனிமேல் இப்படி நடக்காது
எனக் கூறி அடுத்த
வீட்டை நோக்கி
செல்கிறான் தனது
பசியை மறந்துவிட்ட
உணவு விநியோகம்
செய்யும் பையனான
செந்தில்...

–

மு. ஜெரோஷா,
திருப்பூர்

# மழலைகள் வரமே

திருமண உறவில் மழலைகள் வரமே
மழலைகள் வரத்தால் மனதினில் சுகமே..

மனதினில் சுகத்தில் மறைந்திடும் சோகம்
மழலையின் பேச்சினில் தொலைந்திடும் பாரம்..

மழலையின் கோபத்தில் இருப்பது செல்லம்
செல்லத்தின் மகிமையை கொடுக்குமா செல்வம்?

தன் தேவையை அழுதே முடித்துவிடும்
அமுதாய் அடுத்தவர் மனதை கொள்ளையிடும்..

எதிலும் சேட்டைகள் மழலையின் மொழியாகும்
மிட்டாய் வேட்டைகள் அவர்களின் குறியாகும்..

இங்கே மனிதனின் சிரிப்பில் தயங்குகின்றேன்
நித்தம் மழலையின் சிரிப்பில் மயங்குகின்றேன்..

இங்கே மனிதன் சிரித்தே நடிக்கின்றான்
அழகாய் - மனதினில் எதையோ மறைக்கின்றான்..

மழலையின் சிரிப்பில் நடிப்பு இல்லை
நாளும் - மழலையை மனமோ மறுப்பதில்லை..

மழலை வெறுப்பவன் மனிதன் இல்லை
அவன்- மானிடப் பிறவிக்கு அர்த்தமில்லை..

--

சா.நாகூர் பிச்சை,
திண்டுக்கல்.

# நற்றமிழ்

தேனடை கூட்டினில்
தேன்துளி சிந்திடும்
மான்விழியாளே தினம்
அதை கொய்திடும்

பூவிரியும் போதினில்
வண்டுகள் மொய்த்திடும்
பூவையர் சிரிக்கையில்
தமிழ்மொழி இனித்திடும்

மேகங்கள் சூழ்கையில்
வான்மழை பொழிந்திடும்
கானங்கள் சேர்கையில்
மெல்லிசை பிறந்திடும்

நாவெழும் போதினில்
நற்றமிழ் உதித்திடும்
பாவெழும் ஏட்டினில்
சந்தங்கள்ஒலித்திடும்

குயவன் புனைகையில்
மட்பாண்டம் மிளிர்ந்திடும்
கொடியிடை ஏறியமட்குடம்
நீர்தளும்பி நகைத்திடும்

என்னவள் பேச்சினில்
மன்னவன்உளம் நனைத்திடும்
விழியால் தொடுக்கையில்
நற்காதல் மலர்ந்திடும்

காலங்கள் கடக்கையில்
நினைவுகள் நனைத்திடும்
கனவுகள் சூழ்கையில்
மனமதில் மகிழ்ந்திடும்

# பாதம்

வரிசையாய்
நீண்டிருக்கும் விரல்கள்
உன் எழுதுகோலோ?
பேசும் அழகில்
நகங்கள் மட்டும்
வெட்கப்பட்டு
மை பூசுகின்றன..

நாணங்கள்
குடைவிரிக்க
மண்ணை குடையும்
விரல்கள் வெட்கி புதைகிறதே

ஏழு ஸ்வரங்கள் மீட்க
குதித்து விளையாடுகிறது
தாளங்கள் சேரும் வரை
மென்பாதங்கள் மட்டும் வலியோடு....

மெட்டிகள் பூணும்போது
அங்கீகாரம் கிடைத்ததோ?
அச்சமின்றி விரிகிறதே
புதிய வழிகள்....

கடற்கரையில்
விட்டுச் செல்கிறாய்
சுவடுகளைமட்டும்...
அலைகளுக்குள் சுழன்று
காணாமல் போகிறாய்...?

வழியறியா கானகத்தில்
வலியோடு வழிதந்தே
புதைந்து போகிறாய்
பூக்கிறதே பாதைகள் மட்டும்...

கோபங்கள் நிகழும்போது
நீ மட்டும் அடிபடுகிறாய்...
முட்கள் குத்தும்போது
எழுதுகிறாய்சிவப்பு மையால்
புதிய வலிகளை...

பூக்கள்
விரிந்த பாதையில்
நடைபயில்கிறாய்
இதழ்கள் நோகுமென
பதறுகிறாய்...

பாத பூசையில்
நீரூற்றும்போது
பாவங்களை மட்டும்
கருவாய் சுமக்கிறாய்..
இன்னும் எத்தனை முறை
கழுவுவார்களோ?
உன்னைத்தொட்டு...

–

ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

---



அட்டைப்பட
ஓவியம்:

**இரா.மதுவர்ஷினி,**
சரஸ்வதி வித்யாலயா பள்ளி,
பெருவிடைமருதூர்.

## 365 நாட்களிலும் மழை

வேண்டும் என்ற தருணத்தில்

வானம் பார்த்து வேண்டினார்கள்
கடுமையாகக் காய்ந்து கெடுத்தது
வேண்டாம் என்ற பொழுது
தீவிரமாகப் பெய்து கெடுத்தது
எப்பொழுதும் துயரத்தோடு
அழுது தீர்க்கும்
உழவனின் கண்களில்
என்றுமே ஓயாது
பெய்து வருகிறது

வருடம் முழுவதும்
கண்ணீர் மழை
எந்த பருவத்திலும்
அவர்களின் இமைகள் ஈரத்தோடும்
இதயம் காயத்தோடும் தவிக்கிறது
துளிர்த்துக் காய்ந்தும்
அழுகியும் போகும்
விதைகள் அவர்கள்.

## வரிசையாக நில் என்றார்கள்

அங்குமிங்கும் அலைந்தேன்
அலைக்கு என்று ஒரு வரிசை
பறவைக்கு என்று வரிசை
எறும்பிற்கோ அழகான வரிசை
இந்த வரிசை எங்கிருந்து பிறந்தது
ஓ கிரகங்களே நீங்கள்தான்
வரிசைக்கு முன்னோடி
மண் பிறந்து
நீர் பிறந்து
மனிதன் பிறந்து
இன்னும் வரிசையாகச்
சுற்றிக்கொண்டிருக்கும் பூமியே
நீ வரிசையை எங்கிருந்து கற்றாயோ
பெரும் வரிசையில்
ஓர் அழகான ஈர்ப்பு
ஆப்பிள் வீழ்ந்தது
கவனமாய் கடிக்கப்பட்ட
ஆப்பிளிலிருந்து
வரிசையாய் வளர்ந்து
கொண்டிருக்கிறது காதல்
காலமும் முட்களாய் மாறி
வட்ட வரிசையில் சுழலும் போக்கில்
வரிசையற்றே அலைகிறது மனது
வரிசையான பிறப்புகளும்
வரிசையான மரணங்களும்
புரிய வைத்தது இந்த வாழ்வின்
கோடுகளில் எப்படிப் பயணிப்பது
என்பதை.

## நதி சேர்ந்த கண்கள்

இசை தொடும் மனம்
எங்கிருந்தோ அடித்து வரப்பட்ட
கூழாங்கலை இன்று பார்த்தேன்
அழகான புன்முறுவலோடு
இசைத்தது அதன் இசையை
நீர் போக்குவரத்தோடு
பார்த்துவிட்டு வந்த பிறகும்
அந்த கூழாங்கல்லின் இசை
ஓடிக்கொண்டே இருக்கிறது
என் உடல் நதியில்
நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது
மீண்டும் மீண்டும் இடம் பெயர்தல்.

## தொலைக்காட்சியும் மின்விசிறியும்

ஓடிக்கொண்டேயிருந்தது

அந்த கணம்
சீரியல் பார்த்திருந்த
அம்மாவிற்கு வருத்தம்
திடீரென்று நின்றுபோன
மின்சாரத்தைத் திட்டித்தீர்த்தாள்
தெருவிலிருந்த அப்பா அன்றைய
நாளுக்கான சோகத்தைச்
சேமித்தவாறே
எல்லாம் வெளியே வாங்க என்றார்
மின்சாரத்தை
திட்டிக்கொண்டே வந்த
அம்மாவைப் பார்த்தார் அப்பா
சட்டென்று மின்சாரம் வந்ததும்
வீற்றென்று மீண்டும் உள்ளே ஓடினாள்
அம்மா
செல்போனில் உறைந்து போகும்
தன்பிள்ளைகளின் கண்களில்
எந்த கனவும் இல்லாமல் போனது
அப்பாவிற்கு வருத்தம்தான்
சதா செல்போனிலும்
தொலைக்காட்சியிலும் உறைந்து
போன வாழக்கையை
கவனப்படுத்துகிறது
காற்று என்றார்

கதவு திறந்து இருந்தும் யாரும்
வெளிவரவில்லை

எல்லோரும் வெளியே வாருங்கள்
என்றார்

காற்று தன் பாதையில்
பயணம் செய்கிறது
மனிதர்களின் கவனம் பெறாமலேயே
வெளியே அமர்ந்து காற்றோடு
பேசிக்கொண்டேயிருந்தார் அப்பா.

## தொடர்

துளித் துளியான மழை
பறவையின் எச்சங்கள்
துவண்ட மனதோடும்
துள்ளலோடும் விழும் பாத சுவடுகள்
என அனைத்தையும் செரித்தும்
சாம்பலாக்கியும் கடக்கும்
இடைவெளியில்
பூத்துக் களிக்கும் நிலம்
பிரபஞ்சத்தின் சிறிய அறை
இந்த பூமி எனும் சிறிய அறையில்
பறந்து வந்து தங்கி
மீண்டும் பறந்து போகும்
தூரம்தான் இந்த வாழ்வு
சொற் குறிப்புகளை நிரப்பிவிட்டு
பறக்கிறது ஒவ்வொரு பறவையும்
சொற்கள் இறந்துவிடாமல்
பற்றிக்கொள்கிறது உடல்.

## துயரம்

தீக்குச்சி உரசி எழுதும்
நேரத்தில் காற்றின் பலம்
தெரிந்தது
லேசான தூரலில் ஜன்னல்
கண்ணாடியும்
நனைந்து போயிற்று
பலத்த இடியைக் கண்டு
அஞ்சவில்லை பெய்யும் மழை
கண்களைக் கிழிக்கும் மின்னலின்
வெளிச்சத்தை ரசிக்கவில்லை
மழையும் மேகமும்
தொடர் மழை
சற்று பயம் கலந்து போனது மனதில்
ஜன்னலை மூடினேன்
அழகான வசந்தம் மழையில்
தொடர்ந்தது
எரிந்த மெழுகுவர்த்தி அணைந்து

போயிற்று தொடர் மழை இரவில்
மெல்லக் கண்கள் உறக்கத்தில்
தள்ளிய போது நானில்லை
மறுநாள் காலை
மீண்டும் எழுந்து விட்டேன்
அபூர்வம் தானே
மீண்டும் தொடர்ந்தது சந்தை வாழ்வு
காலத்திற்கு வெவ்வேறு காலணிகளை
மாட்டி விடும் மனிதர்களுக்கு மத்தியில்
வாழ்ந்து கொண்டிருப்பது இந்த
நூற்றாண்டின் துயரம் மட்டும் அல்ல
ஒவ்வொரு நூற்றாண்டின்
துயரமும் கூட
கத்தரிக்க முடியாத பருவங்களைக்
காலம் நகர்த்துகிறது.

## அணு விதைத்த அறுவடையில்

ஆள் மயங்கி தடம் பதித்தது
ஒரு பாதை
பாதை வழியே மெல்ல நகரும்
மனப் பந்து
உயிர் மலர்ந்து
திரை நீக்கி
உதிர்கிறது வாழ்க்கை பூ
நரை நகர்த்தி
கரை அமர்ந்து ரசிக்கிறது
மன அலை
கரையருகே அழகான
வண்ணத்துப்பூச்சி உச்சி முகர்ந்தது
உவர்க்கும் சமுத்திரத்தை ருசி
பார்த்தது
கடலில் தேன் எடுக்க முடியாமல்
கரையருகே
பூவைத் தேடியது

மனமோ வாழ்வைத் தேடுகிறது
இன்னும் உவர்க்கும் சமுத்திரத்தில்
வாழ்வின் பயங்கரம்
அடிமனதின் ஆழத்தில்
நிழலாய் நகர்கிறது
எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே
யாருடைய நிழலையும் விரும்பாமல்
சுற்றி வருகிறது சூரியன்.

## ஒளி இரவை பாடும்

பெரும் பாடகன்
ஒளியின் கரங்களில்
இரவு தவழ்ந்து
காலமற்ற கைகளில்
அமர்ந்து நகர்த்துகிறது
இந்த பிரபஞ்ச வாழ்வை
பெரும் தூண்டலோடு.

## மலர்ந்த பூ

விரிந்த இலை
எரியும் சுடர்
இவற்றின் கனவுகளும்
நினைவுகளும்
ரகசியமானது
மலர்வதற்காக விரிந்து
உதிர்ந்தது
எரிந்து எரிந்து
இருள் சூழ்ந்து
இறுதியை முத்தமிட்டது பொருள்கள்
விழிச் சாயலிருந்து விலகி நிற்கிறது
ஒவ்வொரு பொருளின்
நிலையான மௌனங்கள்.

## இந்த இரவு அவ்வளவு

அழகாக இல்லை

அவளை விரும்பினேன்
இது மோன இரவு
தூங்கும் மலரைத் தட்டி எழுப்பி
முத்தம் தருவதைப்போன்ற இரவு
அவள் தூங்குவதைப்போல்
நடிக்கிறாள்
மெத்தையில் பூக்கள்
பூத்துக்கொண்டேயிருந்தன
அவ்வளவும் வாசனை
அது உன் வாசனை மாயா
நீ கனவில் அடிக்கடி வந்தாய்
உன்னைக் காதலி என்று
அழைத்துவிட்டேன்
அதனால் உன் கோபம்
எனக்குப் புரிகிறது
அறை முழுவதும் உன் நினைவுகள்
மாய பூக்களோடு போரிட
என் இதய ஆயுதத்தை
சுதர்சனமாக்கி எறிந்துவிட்டேன்
பூக்களை உதிரச்செய்யும் அளவிற்கு
காதல் செய்கிறது காம சக்கரம்
ஆடையற்ற இந்த இரவை
ஒளி குடிப்பதைப் போல்
நான் உன்னைக் குடித்துக்கொண்டே
இருக்கிறேன்
மன்னித்துவிடு மாயா
உன் அனுமதி இல்லாமலேயே
உன்னைக் குடிப்பதற்கு.

## அழகான வெள்ளை இதயமும்

வெள்ளை இரத்தமும்
கருப்பு ரத்தத்தைக்
தனக்குள் அடக்கி
அழகுபார்க்கிறது
தன் தூய்மையான முகத்தில்
எழுதித் தீர்க்கும் வரிகளைச் சுமந்து
வேதனையோடும்
இன்பத்தோடும்
புத்தக உடலாக நீள்கிறது
எரிந்து சாம்பலாகி
ஆற்றலை வெளிப்படுத்தும்
ஒவ்வொரு பக்கத்திற்குள்ளும்
வெள்ளைத்தாளும்
கருப்பு மையும் விளையாடி மகிழ்ந்து

எடிட்டர்களோடு கருப்பு மை தன்னை
சரிசெய்து கொள்கிறது

வெள்ளைத்தாள் எப்பொழுதும் மேகம்
போன்று எழுத்தைப்பொழியும்

வெள்ளைத்தாளின் கற்பத்தில்
எத்தனையோ எழுத்துகள் மழைபோல்
பிறக்கிறது
மனிதர்களைப் போலப் பேசவும்
செய்கிறது
கணத்த இதயத்தோடு
காகிதங்கள் இசை குறிப்பின் தீராத
பக்கங்களாய் அசைகிறது.

–

ப. தனஞ்ஜெயன்

# கடவுள் இறந்துவிட்டார் – நீட்சே

கடவுள் இந்தச் சொல் அறுதப் பழசானாலும் இன்று வரை புத்தம் புதுசுதான். கிறித்துவத்தில் அடித்தளமே கன்னி மரியாளுக்கு இயேசு பிறந்ததும் சிலுவையில் அறையப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததும் தான். பன்னிரு சீடர்கள் கிறித்துவத்தை உலகின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு சென்றனர். மனமுவந்தோ அல்லது வேறு காரணத்தாலோ மக்கள் இயேசுவை இறைமகனாக ஏற்றுக் கொண்டனர். கிறித்துவம் பாவிகளுக்கான மதம் என்ற கூற்றை உடைத்தெறிந்தனர்.

கிறித்தவம் முன்பு எப்போதும் இல்லாத தேக்கநிலையை இன்று கண்டிருக்கிறது. கட்டுப்பாடற்று அனைத்தையும் அனுபவிக்கத் துடிக்கும் போகபூமியாகிய மேலை நாட்டினரை வாழ்க்கையில் ஒருமுறை கூட சிரித்திடாத இயேசு கவரவில்லை. அன்றாடம் கூலி வேலை செய்து வயிற்றை நிரப்பும் ஏழைகள் மிகுந்த கிழக்கு நாடுகளுக்கு சுவர்க்கத்தை பற்றிப் பேசும் துயரக்கடவுள் தேவையாய் இருக்கிறார். அதே மேற்கு நாடுகள் வாழ்க்கையை ஒரு திருவிழாவாக கொண்டாட்டமாக கருதும் கிருஷ்ணரின் பிம்பத்திற்கு மனதை பறிகொடுக்கின்றனர்.

இன்று குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவர்கள் அந்த மதத்தின் புனிதநூலைத்தான் கட்டாயம் வாசிக்க வேண்டும் என்பதில்லை. எந்த வேதத்தில் சத்தியத்தைக் கண்டடைகின்றார்களோ எந்தக் கருத்துக்கள் நோக்கி ஈர்க்கப்படுகின்றார்களோ அப்புத்தகத்தை தங்கள் வேதமாக ஏற்றுக் கொள்ளலாம். மதம் வாழ்க்கையின் தத்துவார்த்த கேள்விகளுக்கு விடை சொல்கிறதா என்றால் இல்லை. மதம் எப்போதும் சுயசிந்தனையாளர்களை ஏற்றுக் கொள்ளாது. அப்போதைய யூதமக்கள் தச்சனின் மகன் எப்படி தன்னை யூதர்களின் ராஜா என சொல்லிக் கொள்கிறான் என்ற வாதத்தையே முன்வைத்தனர். அப்போது அரசனை கடவுளின் பிரதிநிதியாகத்தான் மக்கள் மதித்தனர். பழைய ஏற்பாட்டில் கடவுள் ஆறு நாட்கள் உலகைப் படைக்க எடுத்துக் கொண்டார் ஏழாவது நாள் ஓய்வெடுத்துக் கொண்டார் அதுதான் ஞாயிற்றுக்கிழமை. இயேசு ஓய்வு நாளில் ஒரு வியாதியஸ்தனை சொஸ்தமாக்கினார். இதை மதத்தை அவமதிக்கும் செயல் என்றார்கள் யூதமத குருமார்கள்.

மனித இனத்தின் தோற்றம் ஆதாம், ஏவாளுடன் ஆரம்பிக்கிறது. சாத்தானுக்கு செவி கொடுத்து அறிவுக்கனியை உண்டதால் கடவுளால் சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். இந்த ஆதாம் தான் முதல் இறைத்தூதராக முன்னெடுக்கப்படுகிறார். இறைத்தூதராலேயே மாயைக்கு ஆட்படாமல் தப்பிக்க முடியவில்லையென்றால் நாமெல்லாம் எம்மாத்திரம். இது பொய்மான் என்று இராமனின் ஞானதிருஷ்டி கண்டுகொண்டிருந்தால் இன்று இராமாயணமே

இல்லையே. மதம் எதற்காக தோன்றியிருக்கும் என்ற கேள்வியை முன்வைப்போம். எதிரிகளிடமிருந்து தன் இனத்தாரைக் காப்பாற்ற, இக்கட்டான சூழ்நிலையில் குழுத்தலைவரையே கடவுளாக நம்பி அவர் எடுக்கும் முடிவை ஏற்பது இது தான் பதிலாக இருக்கும். வாழ்க்கைக்கு பின்னாலுள்ள மறைபொருளை அறிவது. இதுவும் மதத்தின் தோற்றத்திற்கு ஒரு காரணமாக அமைந்திருக்கும். இப்படி பல குழுக்கள் உருவானது. அவர்களுக்கென்று ஒரு கடவுள், வாழ்க்கை முறை இதெல்லாம் உருவானது. இது என்மதமா உன்மதமா? என் கடவுளா உன் கடவுளா? என்ற மதப்போரில் மனித குலத்தை கொண்டுபோய்விட்டது.

மதம் என்ற மூன்றெழுத்தால் பலகோடி பேர்களின் குருதி இந்த மண்ணில் சிந்தப்பட்டது. எல்லா மதங்களுமே கிணறுகள் தான். இன்னும் அடியாழத்தில் பூமிக்கடியிலுள்ள மதம் கடந்த கடலிலிருந்தே அவைகள் தண்ணீரை எடுத்துக் கொள்கின்றன. வேறு வேறாக தோன்றினாலும் அறுதி நிலைப்பாடு ஒன்று தான் இதை நீங்களும் நானும் ஏற்றுக் கொண்டால் நாடு, மொழி, இனத்தால் உலகம்  இவ்வளவு பிளவுபட்டு நிற்காது. பாதை தான் வெவ்வேறு முடிவு ஒன்றே. கூத்து முடிந்ததும் மேடையின் பின்புறத்தில் இராமனும், இராவணனும் எதிரெதிரே அமர்ந்து சிகரெட் பிடிப்பார்கள். ஊர் கதை பேசி வம்பளப்பார்கள்.

இது தெரியாத நம் ஆட்கள் தான் கொடிபிடிப்பதும் கோஷமிடுவதும். மதம் வாழ்க்கை நெறியை பின்பற்றுவதில் தோல்வி கண்டுள்ளது. பாமர ஜனங்கள் மதத்துக்கு உண்மையாய் இருந்தாலே போதும் என்ற முடிவுக்கு வருகிறார்கள். பூமிக்கு அத்தனை இறைத்தூதர்கள் வந்துசென்றும் இன்னும் மனிதகுலம் ஏற்றம் பெறவில்லை. உலகத்தை மதக்கண்ணாடி வழியாக பார்க்கும் வரை பேதங்கள் இருந்து கொண்டுதான் இருக்கும். பலகிளைகளுக்கு காரணமாக இருப்பது வேர்கள் தான் என்றுணர வேண்டும்.

கடவுள் இந்தப் புதிருக்கு விடைகாண புறப்பட்டவர்கள் ஏராளம். எல்லோரையும் போலத்தான் இயேசுவும் வானத்தைப் பார்த்து புலம்பினார் ‘பிதாவே என்னை ஏன் கைவிட்டீர்’ என்று. அவருக்கு பதிலொன்றும் கிடைக்கவில்லை. கிட்டத்தட்ட யோவானிடமிருந்து ஞானஸ்நானம் பெற்ற பின்பு மூன்றாண்டுகள் ஆங்காங்கு மக்களிடையே தோன்றி பிரசங்கம் செய்தார். கடவுளைப் பற்றி, பரலோக ராஜ்யம பற்றி கடைசியில் அவருக்கே மௌனம் தான் பதிலாகக் கிடைத்தது. வேறென்ன செய்ய முடியும் எல்லாம் முடிந்துவிட்டது.

‘பிதாவே உம் விருப்பம் அதுவானால் அப்படியே ஆகட்டும்’ என தனக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டார். இயேசு சிலுவையில் மரித்தவுடன் அது கிறித்தவ மதத்தின சின்னமானது. யூதர்களின் ராஜாவா நீ என அவர்மீது காறி உமிழ்ந்தவர்கள்

இன்று அவரை கடவுளாக ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். காலமும், இடமுமே மனிதனை அடிமைப்படுத்துகிறது. காரல் மார்க்ஸ் மதம் ஒரு போதை மருந்து என்றார். பெரியார் மதத்தை சமூக விரோத அமைப்பு என சாடுகிறார்.

பல நாடுகளில் பார்க்கலாம் மத அமைப்புகள் அரசைவிட அதிக அதிகாரம் பெற்றவையாக இருக்கின்றன. மத அமைப்புகளில் அரசின் சட்டம் செல்லுபடியாகாது. மத அமைப்பைச் சார்ந்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி கேள்வி கேட்க தயங்கும் முதுகெலும்பில்லாத ஓர் அமைப்பாகத்தான் அந்நாட்டு காவல்துறை செயல்படுகிறது. மதம் என்பது கடவுளின் பெயரால் குற்ற நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் அமைப்பாகவே இன்று இருந்து வருகிறது. இன்றைய மதங்கள் கொள்கைகளை அடித்தளமாக கொண்டதல்ல.

Born with silver spoon என்று சொல்கிறோமே இவர்களுக்கெல்லாம் மதம் என்பது கழற்றி மாட்டும் சட்டையைப் போன்றது. மதம் மேல்தட்டு வர்க்கமான இவர்களின் வாழ்க்கை முறையை சிறிதும் மாற்றாது. ஏழைகளுக்கு பிறப்பிலிருந்து இறப்புவரை எல்லாம் மதம் தான். இவர்களது எதிர்பார்ப்பு தங்களை மீட்க இரட்சகர் ஒருவர் வருவார் என்பது. இவர்கள் மதத்தை தத்துவ ரீதியாக அணுகுபவர்கள் கிடையாது. சலுகைகளும், வசதிவாய்ப்புகளும் கிடைக்கும் பட்சத்தில் இவர்கள் வேறு மதத்துக்கு தாவுவதும் நடக்கத்தான் செய்கிறது.

நீட்சேவின் தாய் அவனை பாதிரியாராக்கத்தான் ஆசைப்படுகிறார். நீட்சே சிறுவனாய் இருந்த போதே தந்தையை பறிகொடுத்தார். நீட்சேவின் இளமைப் பருவத்தில் அவர் ஒரு மத நிராகரிப்பாளராக உருவெடுப்பார் என்பதற்கு எந்தவித முகாந்திரமும் தென்படவில்லை. தத்துவ இயல்மீது நீட்சேவிற்கு ஆர்வம் அதிகம். ஜெர்மானிய நாடக இசைக் கோர்ப்பாளராக விளங்கிய வாக்னரை நீட்சே தன் முன்மாதிரியாகக் கொண்டார். நீட்சேவின் ஆதர்சன நாயகன் நெப்போலியன் போனபார்ட். அதனால் தான் நீட்சேவின் எழுத்து ஹிட்லருக்கு வழிகாட்டியது. உலகில் நடப்பவைகளெல்லாம் அதிமனிதனின் வரவுக்காகவே என்கிறார் நீட்சே.

இயற்கையின் விதிகளைத் தவிர்த்து கடவுளின் இருப்பை ஏற்றுக்கொள்ளாதவர் நீட்சே. சூரியன் மேற்கில் உதிக்கட்டும் நான் ஆலயத்துக்குள் காலடி எடுத்து வைக்கிறேன் என்றவர். மதம் வாழ்க்கையை நீ மட்டும் தனியே எதிர்கொள்ளப் போவதில்லை கடவுள் இருக்கிறார் என்கிறது. இது மனிதனுக்கு வசதியாகப் போய்விட்டது. தான் முடிவு செய்வது இருக்கட்டும் கடவுள் பார்த்துக்கொள்வார் என்று பாரத்தை இறக்கி வைக்க முடிகிறது. இதற்காக மட்டுமே மனிதனுக்கு கடவுள் தேவைப்படுகிறார்.

விதிப்படிதான் நடக்குமென்றால் எதிரிகாலத்தை துல்லியமாக கணிக்க முடிந்திருக்க வேண்டும். மதம் என்பது சுவர்க்கத்தின் கடவுச் சீட்டைப் பெற்றுத் தரும் கேந்திரமாக விளங்குகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அறிவியல் உண்மைகளை முனை மழுங்கச் செய்திருப்பதும் மதம் தான். இன்றும் ஜோதிடத்தில் சூரியனை கோள் என்கிறார்கள். கிறித்துவுக்கு முன்னூறு ஆண்டுகள் முன்பே அரிஸ்டார்கஸ் என்ற அறிஞர் சூரியனை மையப்படுத்தியே பூமி உட்பட கோள்கள் சுழலுகின்றன என்ற கோட்பாட்டை வெளியிட்டார்.

அதை திருச்சபை ஏற்றுக் கொள்வதற்கு எத்தனை நூற்றாண்டுகளானது தெரியுமா? கடவுள் ஆறு நாட்கள் உலகைப் படைத்தார் ஏழாம் நாள் ஓய்வு எடுத்துக் கொண்டார் என்றால் அதற்கு பிறகு என்ன செய்தார் என்ற கேள்வி எழுகிறதல்லவா? தான் படைத்த உலகத்தை பேணிக்காத்தார் என பதில் வருகிறது. சரி இது ஆயத்தமாக ஆத்திகர்கள் வைத்திருக்கும் பதில். உலகைப் படைப்பதற்கு முன்பு என்ன செய்து கொண்டிருந்தார் உங்கள் கடவுள். கடவுள் தனிமையை வெறுத்தார் என்றால் ஒரு பெண்ணைப் படைத்திருக்கலாம். ஏதோ வீட்டுக் கொல்லையில் கத்திரிக்காய் விதைப்பதை போல உலகைப் படைத்தார் என்றால் ஏற்றுக் கொள்ள முடிகிறதா?

ஒன்றுமில்லாததிலிருந்துதான் உலகம் வந்தது. பெரு வெடிப்பு (Big bang)க்கு பிறகுதான் காலமே தோன்றி இருக்க வேண்டும். இழப்பதோ அடைவதோ அல்ல காலம் ஒன்றிலிருந்து மேலான மற்றொன்றுக்கு கடந்து செல்வதே அது. சூரியனைப் போன்றே பல கோடி நட்சத்திரங்கள் பேரண்டத்தில் உள்ளது. எத்தனையோ சூரிய குடும்பங்கள் இருப்பதாக இன்று பல்லண்ட கோட்பாடுகூட முன்வைக்கப்படுகிறது. கோள்கள் எவ்வாறு ஒன்றையொன்று ஈர்க்கின்றனவோ அவ்வாறே ஒன்றையொன்று விலக்கவும் செய்கிறது. இதனால் அண்டம் விரிவடைந்து கொண்டே செல்கிறது.

இப்படி விலகிச் செல்வது Blak Hole எனப்படும் கருந்துளையின் ஈர்ப்பு சக்தியினால் கூட இருக்கலாம். காலமற்றதுக்கு செல்வதென்பது மனித இனத்துக்கே வைக்கும் முற்றுப்புள்ளி. நீர் ஆவியாவதும் சூரியன் உதிப்பதும் யாருடைய கட்டளைகளையும் கேட்டு நடைபெறும் காரியமல்ல. உன் வசதிக்காக நீ ஏற்படுத்திக் கொண்டதே கடவுளே தவிர அப்படி யாரும் இருக்கவில்லை.

பேரண்டத்தின் நிகழ்வை மாற்றியமைக்கக்கூடிய சக்தியை கடவுள் என்றால் அதற்கு நூறு விழுக்காடு சாத்தியமில்லை என்றே கொள்ளவேண்டும். இயற்கையான நிகழ்வுகளில் தலை நுழைக்கக் கூடிய சக்தி வெறும் கற்பனாவாதமே தவிர நிரூபணம் செய்ய முடியாது. நீட்சேவின் அதிமனித கோட்பாடு கடவுளை நிராகரித்தது. இங்கிருந்து சொல்லலாம் தொடுவானம் உண்டென்று யார் போய் தொட்டது அதை. புத்தரின் சூன்யவாதம் அதாவது சூன்யத்திலிருந்து வெளி வந்து திரும்பவும்

சூன்யத்துக்குள்ளே புகுவது. இறப்புக்கு பிறகான வாழ்க்கை இல்லை. உடல் மண்ணுக்கு எருவாகப் போவதைவிட வேறு வழி இல்லை. ஆத்மா என்பதெல்லாம் வெறும் கனவு. எந்த ரூபத்திலாவது வாழலாம் என தான் நித்யமானவன் என்றும் அழியாதவன் என்று  மனிதன் தன்னைத் தானே வசியம் செய்து கொள்வதே அது. எத்தனையோ பேரரசர்களும், பேரழகிகளும் மண்ணுக்கு எருவாய்த்தான் போனார்கள். இன்று கோவில்களில் கூட்டம் குவிகிறதென்றால் அதற்கு மரண பயமே மூலகாரணம். நீட்சே சொல்லும் அதிமனிதன் பரிணாம வளர்ச்சியால் மனிதன் அடையும் நிலையாகக் கூட இருக்கலாம். வாழ்க்கை நீட்சேவின் வேர்களை ஆட்டிப்பார்த்தும் அவர் இறைமறுப்பு கொள்கையை கைவிடவில்லை.

கடவுளுக்கு இங்கு என்ன வேலை? இயற்கையின் வெல்லப்பட முடியாத விதி கடவுளை நிராகரிக்கின்றது. Law என்னும் விதி சரிவர இங்கு செயல்படும்போது கடவுளுக்கு வேலை இல்லாமல் போய்விடுகிறது. காலமும், இடமும் தான் உலகத்தை இயக்குகிறது. அனைத்தையும் உள்ளடக்கிய கடவுள் என்பவர் காலமும், இடமும் உள்ள சிறைப்படுத்தப்பட்ட பகுதிக்குள் ஏன் பிரவேசம் செய்கிறார் என்ற கேள்விக்கு பதில் இருக்கின்றதா?

மனிதனுக்கு ஆயுட்காலம் அறுபது ஆண்டுகள் என்றால் அவனால் உருவாக்கப்பட்ட கடவுள் பன்னெடுங்கால் பிரபஞ்சத்தை ஆளுகிறார் என்ற கருத்தை எப்படி அவர்கள் முன்வைக்க முடியும். எதிர்ப்பிலேயே வாழுங்கள் விதை முதற்கொண்டு எல்லா உலக ஜீவராசிகளும் எதிர்ப்பிலேயே தான் வாழுகின்றன. கடவுள் எல்லையற்ற சுதந்திரம் உடையவர் என்றால் அவரால் விதியின் மீது கைவைக்க முடியும் என்றாகிறது. அவரால் அப்படி குறுக்கிட முடிந்தால் அது விதியாகவே இருக்க முடியாது.

நீட்சேவின் கேள்விகளுக்கு புனிதநூல்களில் பதில் இல்லை. மதத்தின் மீது அபிமானம் கொண்டவர்கள் கிளிப்பிள்ளைகளாகத்தான் இருந்தார்கள். அவர்கள் சுயஅறிவை அடகு வைத்தவர்கள். எதையும் கேள்வி கேட்காமல் தலையாட்டிக் கொண்டனர். எள் என்றால் எண்ணெய்யாக வந்து நின்றனர். அங்குசத்துக்கு கட்டுப்படாத மதம் பிடித்த யானையானது மதம்.

கேட்பவருக்குத்தான் நீதி நியாங்களே தவிர போதிக்கின்றவர்களுக்கு இல்லையென்றானது. நான் தான் கடவுள் என்று பிரகடனப்படுத்திக் கொண்டவர்கள் பின்னால் மக்கள் அணிதிரள ஆரம்பித்தார்கள். வாழ்க்கை அர்த்தமிழந்தது. ஜனத்தொகை பெருகுவது போல கடவுளர்களின் எண்ணிக்கையும் பெருக ஆரம்பித்தது. மக்கள் தாங்கள் ஏமாற்றப்படுகிறோம் என்று தெரிந்தும் எதிர்க்க முன்வரவில்லை.

மேலும், மேலும் தாங்கள் பின்னிய வலையிலேயே சிக்கிக் கொண்டனர். நீட்சே மதஅமைப்புகள் மக்கள் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியது உண்மை இயேசுவை அல்ல என்றார். ஒருவன் கீழ்மைகளிலிருந்து முயற்சி செய்து முன்னேறி மேலே வருவதற்கு கடவுள் தேவையில்லை நன்கு உழைத்தாலே போதும். புனித நூலில் சொல்லப்பட்டு இருப்பதற்காக விசுவாசிக்க வேண்டாம் பகுத்தறிவால் ஆராய்ந்து பார்த்தாலேயானால் மதம் உன் கைகளில் விலங்கிட்டு இருப்பதை அறியலாம். கடவுளே என்று இருக்காதே உனக்கு கிடைத்த ஒரு வாய்ப்பு அதை பயன்படுத்திக் கொள். வேலை செய்துவிட்டு காத்திருப்பாயேயானால் ஒரு நாள் உலகம் உன் காலடியில் வந்து விழும். எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு என்பது அய்யன் திருவள்ளுவனின் வாக்கு.



ப. மதியழகன்,
115,வள்ளலார் சாலை,
ஆர்.பி.சிவம் நகர்,
மன்னார்குடி - 614001.
திருவாரூர் மாவட்டம்.
கைப்பேசி: 9597332952
பகிரி: 9384251845

# பீனிக்ஸ் பறவையே... எழுந்து வா...

படுதோல்விகளால்
கலங்கிடலாமா!
அவமானங்களால்
முடங்கிடலாமா!

இலக்குகளை
குறிக்கோளாக்கு.
விடாமுயற்சியை
பயிற்சியாக்கு.
ஊக்கமதை உரமாக்கு.
நாளைய விடியல்
உனக்கு.

கருகிய
அருகம்புல்லும்
துளிர்த்திடுமே.
உருகிய
வார்ப்புகள்
இரும்பாகுமே.

மண்ணில்
புதைந்த விதைகள்
விருட்சமாகும்.
தீயில்
உருகிய தங்கம்
பொன்னாகும்.

முடங்கி கிடந்தால்
உடலும் பாரமாகும்.

உன்னை அறிந்தால்
வானமும் வசப்படும்.

எட்டும் தூரம்
இமயம்.
எட்டிப்பார்
அதனை மிஞ்சும்
உன் உயரம்.

எதையும் வெல்லும்
உனது யுக்தி.
உலகில் நீயே
பெரும் சக்தி.

பீனிக்ஸ் பறவையே
எழுந்து வா...
காலங்கள் போற்றிடும்
துணிந்து வா...

–

சா.கா.ரமேஷ்,
சாலவாக்கம்.
8056718993

# மீண்டும் வா பாரதி

அங்கெங்கே
வெள்ளைத் தாளில்
கவிதையாக
கட்டுரையாக
கதையாக
கோடி பிறப்பெடுக்கிறாய்
பாரதி!

யானை மிதித்தாலென்ன
என்றும் சுமக்கிறது தமிழ்
உன்னை!

நீ
பிறக்கும் முன்
மழையை மட்டுமே
பொழிந்த வானம்
பிறந்த பின்
கார்த்திகையில்
கவிதை மழையை எழுதுகிறது
நீர்க் குச்சிகளால்!

இந்திய தேசத்தின்
எல்லையை
கவிதை வரிகளால்
வரைந்தவன் நீ!

எல்லா மொழிகளும்
கோள்களாய் சுழல
சூரியனாகத் தமிழை
வைத்தவன் நீ!

உன்
பாச்சேலையை
சூடிக் கொண்டு தமிழ்
வீட்டில் முடங்கவில்லை
போரிடச் சென்றாள்
வெள்ளையனுக்கெதிராக!

பேருந்தில்
முள்காட்டில்
மூடிய விரல்களைக் கிழிக்கும்
கதறல் ஒலிகளில்
கேட்கிறது
பெண் விடுதலைக்காக
மீண்டும் வா!
பாரதியே!

சாதிகள் இல்லையடி
என்றாய்...
இங்கே
சுதந்திரக் கொடியை விட
உயரத்தில் பறக்கிறது
சாதிக் கொடிகள்!

கொண்டாடிய
விடுதலையின் கழுத்தில்
ஆதிக்கத்தின் அழுத்தம்!
வழிகிறது இரத்தம்!

இந்த
இரத்தத்தைக் குடிக்கும்
பயிர்கள் எல்லாம்
வாள்களாகட்டும்!
எழுதுகோல்களாகட்டும்!
ஆதிக்கத்தின் தலையில்
மின்னல்களாய் இறங்கட்டும்!

மடிந்துக் கிடக்கும்
விடுதலையை
உயர்த்திப் பிடிக்க
உன் எழுதுகோல் வேண்டும்!

மீண்டும் வா!
பாரதி!

–



சா. கா. பாரதிராஜா,
38-3, கைலாசநாதர் கோயில் தெரு,
பெரிய நத்தம்,
செங்கல்பட்டு - 603002.
9944315732

---

## யாருமற்ற சாலையில் தனித்து

பயணித்து கொண்டிருக்கிறது
மழை வெள்ளம்.....!!!!

## பிளவுற்ற மண்

ஒன்று சேர்க்கிறது
மழைத்துளி...!!

## அந்தி வானம் பார்த்து அழகாய்

ஆகாச நடை போட்டு
மணல் வெளியில் ஓவியம் வரைந்து
இயற்க்கையின் மடியில் கவிதை
வடித்து

உன் கண்ணங்களில் அதை சமைத்து
இதழ்களில் சுவைத்து இனிய
சொற்கள் மொழிய பல
இன்பங்கள் வழிய
இனிய இசைகளை செவிகளுக்கு
ஊட்டி
விருந்தோம்பல் செய்த காதல் காலம்
கரையேறிய
இந்த காலம்...!!!

## வண்ணங்களை சுமந்து செல்லும்

வண்ணத்துப்பூச்சியின்
சிறகில் பார்க்கிறேன்
மழையில்லா ஒரு
வானவில்லை.......!!!!!!

–

ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்,
8867933021

# ஒரு கணவன் தன் மனைவிக்காக எழுதிய வரிகள்

எங்கோ பிறந்து
எனக்கு மனைவியாக வந்து
அவளுக்கென்று இருந்த
ஆசைகளையும் கனவுகளையும்
மறந்து விட்டாள்..

காலையில்
நான் எழும்புவதற்கு முன்பு
அவள் எழுந்து விடுகிறாள்..

ருசியாக உணவு சமைத்து தருகிறாள்..
ரகசியமாக காதல் செய்கிறாள் ..

இரவில்
நான் வரும் வரை
வழி மீது விழி வைத்து
காத்திருக்கிறாள்.

மாதவிடாய்
வலி அவளை கொல்லும் போதும் .,
சிரித்துக் கொண்டே
அன்பாக பேசுகிறாள் ..
அனைத்து வேலைகளையும்
சளைக்காமல் செய்கிறாள் ..

ஓர் நாள்
கர்ப்பம் ஆகி விட்டேன் என
காதுக்குள் சொல்லி
மார்பில் சாய்ந்தாள் ..

பக்குவமாக
குழந்தை போல் பார்த்துக்
கொண்டேன் ..

ஒரு நாள் அவசரமாக
வைத்தியசாலைக்கு கொண்டு
சென்றேன்..

ஒரு தாதிப் பெண்
என்னையும் உள்ளே
அழைத்து
அவள் அருகில் நிற்க சொன்னால்

வலியால் அவள் துடிப்பதை பார்த்த
என் கண்கள்

என்னையும் அறியாமல் என் கண்ணில்
கண்ணீர் துளிகள் ததும்பியது

இந்த அன்புக்கு என்ன பெயர் என்று
எனக்கு தெரியவில்லை

சதை கிழிந்து
குழந்தை வெளியில் வரும் போது

ஐயோ அந்த வலி

கடவுள் கூட கவிதையில்
சொல்லிவிட முடியாது

அவள் அனுபவித்த வலி
நிச்சயமாக மரணத்தின் ஒத்திகை
என்று உணர்ந்தேன்

ஒரு சில

நிமிடங்களில்

குழந்தையை கையில்
கொடுத்தார்கள்

நான்
அவள் நெற்றியில் முத்தம் வைத்து
இருக அணைத்து கொண்டேன்

மரியாதை செய்யுங்கள்
எம் இரைவிகளுக்கு
என் துனைவிக்காகவும்
நான் நேசிக்கும் அம்மாவுக்காகவும்
இந்த உலகில் வாழும்

அனைத்து பெண்களுக்கும்
இந்த வரிகளை
சமர்ப்பிக்கிறேன்...

–
CM. சிவா,
வடுவூர்.



---

# தேநீர் நேரம்...

சட்டென வந்த மழையில் அலுவலக சாளரக் கண்ணாடிகளுக்கிடையே படபடத்து நின்றதொரு கருநிற வண்ணத்துப் பூச்சி !!!

இரண்டு கண்ணாடிகளும் பொத்திப் பிடித்துக் கொண்டு கண்ணாம்பூச்சி விளையாட, அடைபட்ட வண்ணத்துப் பூச்சியோ கண்ணாடியில் இடித்து இடித்து காயமாக்கிக் கொண்டிருந்தது!

ஒருவழியாக இருவரின் போரை நிறுத்தி வைக்க, அந்த தேநீர் நேரம் வாய்ப்பளித்தது.

இப்போது வண்ணத்துப்பூச்சியுடன் என் மனமும் பறக்க எத்தனித்தது...



–
கவிமலர் த. சரண்யா,
கொழிஞ்சாம்பாறை,
பாலக்காடு மாவட்டம்,

# பாரியன்பன் நாகராஜன் — கவிதைகள்

நெஞ்சில் அவள் வந்த
சுகம்போல் வேறு யார் வந்தும்
எனக்கில்லை.

/
இதற்கு முன்
நீ சொன்ன சொல்லின்
வீரியத்தினால்;
உன் ஆறுதல் வார்த்தைகள்
எதுவும் என்னைச்
சமாதானப் படுத்தவில்லை.

/
சரிபாதி ஈசனை
மறைத்துக் கொண்டு
பார்வதியின்
பாதி உடம்போடு
கதவருகே நின்று
எனைப் பார்க்கும்
தருணம்
அர்த்தநாரீஸ்வரியாய்
காட்சியளிக்கிறாய்
பெண்ணே!

/
ஆற்று நிறைய
தண்ணீர்.
அள்ளிக் குடிக்க
முடியாத
நக்கிக் குடிக்கும்
நாய்வாழ்க்கையில்
நடுத்தர வர்க்கத்தினர்.

/
சிறு பொறியில்
பற்றிக்கொள்ளும்
அக்னிப் பார்வையை
எந்த பெட்ரோல் பங்கில்
வாங்கினாய் பெண்ணே!

/
வந்தது நானென
தெரிந்ததும்
உன் பார்வையை
கீழே சரிய விட்டாயே
அப்போது அடித்தது
என் காதலுக்கு
பம்பர் பரிசு.

/
பிஞ்சுக் கரங்கள்
அள்ளியநீரில் தன்தாகத்தை
தணித்துக்கொண்டது நிலா!

/
தன்னை நாடி வருவோரின்
பாதங்களின் பாவங்களைக்
கழுவுகிறாள் கடல்தாய்.

/
நீயெனக்கு
நண்பனென்றால்
நானுனக்கு எதிரியல்ல.

/
மகளைத் தம் பாட்டியாகப்

பாவித்த தகப்பன்; பேத்தியைத்
தாயாய் நேசிக்கிறான்.

/
உன்னைப் பின்தொடரும்
தருணங்களில்; மறந்தும் கூட
மிதித்ததில்லை.
பிரியத்தின் காரணமாக
உன் நிழலை.

/
உன்னை அடிக்கடி
பார்க்க இயலாத காரணத்தால்
எப்பொழுதும் உன் நினைப்பில்
கிடக்கிறேன்.

/
மழை ஓய்ந்ததும்
வீசும் குளிர்க் காற்று
சூடாகத் தேநீர்ப் பருகும்
சுவைக்கு அடிமையாக்குகிறது.

/
வீட்டில் பத்து பேர் இருந்தாலும்
பொறுப்பானவனுக்கே
குடும்பத் தலைவன் பதவி.

/
மழலைகள் நிறைந்த
வீட்டில் அசையும்
அனைத்தும் தலைகீழ்.

/
உன் விழிக் கணைகளை
என்மீது தொடுக்காதே!
போரின் யுக்தியும் களத்தின்
இன்னபிற கோட்பாடுகள்
எதையும் முழுமையாய்
அறியாதவன் நான்.

/
உன்னை வெறுப்பதற்கு
என்னிடம் ஒரு காரணம்கூட
இல்லை.
நீ வேண்டும் என்பதற்கு
ஓராயிரம் காரணங்களைச்
சொல்லி முடியும் என்னால்.

/
உறவுகளுக்காக திருமணம்
ஊருக்காக கணவன் மனைவி.
நாம் வாழும் காலம்
காதலர்களகவே வாழ்ந்து
விட்டுப் போவோம்.

/
என் காதலை
அங்கீகரித்த பிற்பாடுதான்
உன்னோடு சேர்ந்து
ஆரம்பமாகப் போகிறது
என் வாழ்க்கை.

/
மறக்கால்
உன்னிடம் சொல்ல
நினைத்த கவிதையொன்று
சொல்லாமல் கொள்ளாமல்
தொலைந்து போனது.

/
இருட்டை
விழுங்கியது போலவே
ஆகாயத்திலிருந்த
விண்மீன் ஓட்டைகளையும்,

விழுங்கியிருந்தது பகல்.

/
நின்றது பெருமழை
கரைதலை நிறுத்தியது மண்சுவர்.
அந்நேரம் என்னைத்
தொட்டுப்பார்த்துக் கொள்கிறேன்
நான்.

/
பொதி சுமந்தபடி
மேட்டுச்சாலையைக் கடக்கிறது
மாட்டுவண்டி.
பாடிக் கொண்டிருந்த வழிப்போக்கன்
பாட்டை நிறுத்துகிறான்.

/
இறந்த பின்பும்
இருந்து கொண்டிருக்கிறாய்
என்றென்றும் இதயத்தில் நீ.

/
ஆழ்மனங்களில்
அன்பை விதைத்து
மண்ணுக்குள் விதையாய்
இருக்கின்றாய் நிழல்படத்தில்
மௌனமாய்.

/
வாழ்க்கையை முழுதாய்
வாழவந்து விட்டு
வானுலகத்தில் அப்படியென்ன
அவசரவேலையோ
அற்ப ஆயுள்மரணம்.

/
காற்று மரத்திடம் சொன்ன
ரகசியத்தை; சலசலப்பில்
அம்பலப்படுத்தும் இலைகள்.

/
மரக்கிளையில்
ஏறி இறங்கும் அணில்
விசிலடிக்கும் குறவன்.

/
வார்த்தைகளின்
கூடாரத்திற்குள் நுழைந்த
கற்பனை; அழகிய கவிதையைக்
கைப்பிடித்து வருகிறது.

/
பாதி பழத்தை
தின்று முடித்திருந்தது
பறவை.
பசி மயக்கத்தில் மரத்தை
நோக்கி அம்பை எய்கிறான்
வேடன்.

/
பெண்ணுக்கும்
மண்ணுக்கும் இடையில்
சிலகாலம் இருப்பு.

/
மிதித்ததற்கெல்லாம்
மொத்தமாய்ச் சேர்த்து
விழுங்கி விடுகிறது மண்.

/
செவிமடல்
கருகினாலும் சுகமே
அவசரம் வேண்டாம்.
அன்பே...

அழுத்தமாய்ச் சுடச்சுட
ஒரு முத்தம் கொடு.

/
நீளும் காரணத்தின்
இடைவெளியில்
புரிதலற்ற இருமனங்கள்.

/
கடியாரத்திலும்
மணிக்கட்டிலுமாய்த் துடிக்கிறது
பல ரெட்டைநாடி.

–
**பாரியன்பன் நாகராஜன்,**
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



# சாலைகளில் மட்டுமே

போராடிக்கொண்டிருந்தேன்
படிப்படியாய் ஊருக்குள்
சென்றுப் போராட வைத்து
விட்டீர்களே....

வீட்டிற்குள் புகுந்துவிட்டதென
குற்றம் சுமத்துகின்றீர்கள்.
வீட்டைச் சுற்றிலும்
குளம்போல் காட்சி
அளிக்கிறது என
குறைக் கூறுகின்றீர்கள்.
நான் வாழவேண்டிய
இடத்தில் நீங்கள்
வாழ்ந்துக்கொண்டு
என்னை விரட்டியடிப்பது
நியாயமாகுமா?

நான் யாரையும்
துன்புறுத்துவதில்லை
என்னை என் போக்கில்
விட்டு விடுங்கள்.
உங்களுக்காகவும்,
உங்கள் எதிர்கால
சந்ததியினருக்காகவும்
நான் வாழவேண்டும்
தயவுசெய்து என்
வழியைத் தடைச்
செய்யாதீர்கள்.

இப்படிக்கு
"மழைநீர்"

--
**மு. ஜெரோஷா**

# நானே யானை...!

உன் வீட்டுக்கும்
என் வீட்டுக்குமிடையேதான்
ஏதோ ஓர் இடத்தில்
நம் வீடு இருக்கிறது

மலை நோக்கிய பாதையில்
உன் பார்வை சுவடுகளை
என்னோடு சேர்ந்து எல்லா
பறவைகளும் சுமக்கின்றன

இளமஞ்சள் இளம்பச்சை
இளஞ்சிவப்பு எல்லாமே
உனக்குத்தான்
மாநிறத்துக்கு குறைவான
உன் நிறம் மட்டும் தான் எனக்கு

உனது சிறுவயது ஞாபகங்களைக்
கூறுகையில் எல்லாம்
நான் உன் ஊர் ஆலமரம்
விழுதுகள் வழியே முத்தமிட்டுக்
கொள்கிறது நம் வானம்

உன்னைப் பிரிதல் சாத்தியமா
என்று என்னையே கேட்கிறேன்
உன் குரல் உடைந்த அழுகைதான்
பதிலாகிறது

உன்னோடு இருக்கையில் தான்
உலகம் சரியாக சுற்றுகிறது
மற்ற நேரங்களில்
மதி கேட்ட கடிகாரங்களை
டயர் வண்டி ஆக்குகிறது

காதோரம் படும் மூச்சுக்
காற்றுக்குத்தான் எத்தனை நயம்
அது முத்தமும் இடுகிறது உன்
மொத்தமும் இடுகிறது

உன் காட்டுக்குள் யானை
கண்டால் இன்னும் சற்று
நெருங்கிக் காண்
ஓராயிரம் பிளிறல்களுடனும்
ஒரே ஒரு காதலுடனும்
நானே யானை...!

–
கவிஜி

# மாறும் வார்த்தை மாறா வாழ்க்கை

பல்வேறு கோணங்களில்
நீளும் நெருப்புநாவுகளின்
பசியடக்க
காத்திருக்கும் உடல்கள்

உறைந்த குருதியும்
விரைத்த எலும்புகளுமாகவுள்ள
விறகுகளை உணவாகக்
காத்திருக்கும்
உணர்வற்ற உடல்கள்

வாழ்வதற்கு போராடிய
காலங்கள் கடந்து
இறந்த பின்பும்
உடல்களின் உருவம்
எரிக்கக் கூட போராடும்
போற்றுதலுக்குரிய காலமிது

மரணத்துக்கென்று
மற்றொரு வார்த்தை
இறப்புக்கென்று
இன்னொரு வார்த்தை
வார்த்தைகள்
மாறுகிறதேயன்றி
வாழ்க்கை...

## மயக்கும் மாய பிம்பங்கள்

அப்பத்தாவின் சொற்களை
அலட்சியம் செய்திருந்தோம்
பச்சைகேரட் பார்வைக்கு
நல்லதென்றதை

கோவிந்தன் தாத்தாவை
கேலி செய்திருந்தோம் குங்குமத்தில்
குளித்த பீட்ரூட் குருதிக்கு
சிறந்ததென்றதை

தந்தையவரின் வார்த்தைகளை தகாத
வார்த்தைகளாக காதில்
வாங்கிக்கொள்ளவில்லை
சின்னவெங்காயம் பெரியளவில்
உடலுக்கு உறுதியென்றதை

அம்மாக்களின் குரலை சும்மாவும்
கேட்கவில்லை கறிவேப்பிலை
கூந்தலுக்கு எருயிலையென்றதை

எல்லோரின் பேச்சையும் ஏளனம்
செய்து அயல்நாட்டு மோகத்தில்
ஆர்டர் செய்த பீசா பர்கரை தின்று
பீற்றிக்கொண்டிருந்திருந்தவர்களை
அரூபமான உயிர்கொல்லி
முன்னோர்களின் சொல்லிலிருந்த
மூலத்தை உணர்த்திய கணத்தில்
மாயபிம்பங்கள் மண்ணில் உதிர்ந்தது

## ஆதிமனிதனும் சேதி சொல்வதும்

ஆடைகளின்றி
அலைந்தானன்றி
ஆக்சிஜன் இன்றி
அலையவில்லை
ஆதிமனிதன்

பச்சையாக மாமிசம் உண்டு
பல் துலக்காமல் இருந்ததுண்டு
என்றாலுமவன்

திரும்பியதில்லை
இயற்கைக்கு எதிராய்

அடுத்தநிலை என்றான்
ஆற்றங்கரையோரம் வந்தான்
ஆடையோடு அவசியமானவற்றை
வென்றான்
மரங்களையறுத்தான்
வரங்களை வெறுத்தான்
நாகரீகமென்று சொல்லி
நரகத்திற்கே சென்றான்

திருத்தயாருமின்றி தறிகெட்டு
திரிந்தவர்களுக்கு
கொரோணா கொண்டுவந்தது
இயற்கையோடு இணைந்த
இல்வாழ்வை



–
நேசமுடன் ஈசு,
அலைபேசி 9080628870

---

# சிந்தனை 1000

"நீர்க்குமிழிகள் நிறைந்து கிடக்கும் வாசலில் இரைக்கும் வாலியுடன் நிற்கும் அப்பாவிற்குத்தான் சிரிப்பு கதவை திறக்கவில்லை"

"முனைமங்கள் கரையை கவர்ந்த பொழுதினில் கடலில் நிறையாத கப்பல்களை செலுத்துகிறாள் தங்கை வீட்டின் பின் சுரந்த கடலில்"

"கொட்டிய மழையில் நனைந்தாலும் கொள்கைகள் இல்லாத பறவைக்கு குளிர் ஒன்றும் செய்துவிட போவதில்லை, மயிலும் தோகை விரித்து ஆடலின் அறிகுறியும் உண்டு"

"நிமிர்ந்த மூங்கில் எல்லாம் புல்லாங்குழலாக மாறிவிட்டால் வளைந்த மூங்கில் அவைகளை தூக்கும் கூடையாக மாறிவிடுதல் இயல்பு தானே..."

"என் குதிரை திறன் எழுத்துகளில் எழும் வாட்களின் சொந்தகாரி அவள்
சிறு பட்டாம்பூச்சி மட்டும்தான் நான்...."

–
கவிஞர் கார்கவி
நாகப்பட்டினம்

# அப்பாவிற்கு...!

அப்பா என்ற
முதல் வார்த்தை
என்னை பேச வைத்தது...!

அள்ளிக்கொண்டு
அழைத்துசெல்வாய்
நான் கைகாட்டும்
இடம்நோக்கி
தளர்வான கால்களோடு...!

யானை சவாரி செய்ய
ஆசைப்பட்டேன்
யானையாகவே உருமாறி
சுமந்து செல்வாய்...

அடுக்களையில்
ஒளிந்திருக்கும்
சில்லரைகளை
சமபங்கிட்டு
கொடுப்பாய்
அக்காவிற்கும்
எனக்கும்.....!

புத்தகங்களை
சுமக்கவிடாமல்
என்னை சுமந்து
செல்வாய்
பள்ளிவரை..!

தீபாவளி
வரும்போதெல்லாம்
காணாமல்போகிறது
என்னுடைய பாதுகாப்பான
கிழிந்த அரைகால் டவுசர்...!

வளவளப்பான
புதிய செருப்புகள்
என்கால்களுக்குள்
நுழையும்போது
வாய்பிளந்த
செருப்புகள்
தைத்தே நுழையும்
உன்கால்களுக்குள்...!

நீ திட்டி
வாங்கிகொடுக்கும்
ஒவ்வொன்றையும்
சிரித்துக்கொண்டே
இரசித்தேன்...!

திட்டிப்பேசிய இடம்
வெற்றிடமாய் இப்போது
பிரதிபலிக்கிறது...
திட்டிவிட்டு
தட்டிகொடுக்க
தோள்சாய வா..!

என்னைபேசவைத்து
அழகுபார்த்துவிட்டு
பேசாமல்
மௌனம் சாதிக்கிறாய்
தூரமாய்நின்று...

தூரமாய்போன
உன்னை கேட்டபோது
துடைத்தபோட்டோவிற்குள்
மாலையொடுநிற்பதை
அழுத குரலில் காட்டும்
அம்மா....!

உன்வலியை மறைத்து

என்வழி காட்டிய உன்னை
மனதில் கிடத்தி
தடவிப்பார்க்கிறேன்..
நினைவுகளின்
அரும்புகளாய்
வந்துபோகிறாய்...!

உள்ளங்களில் வைத்து
கொண்டாடாமல்
முதியோர் இல்லங்களில்
வைத்து பார்வையிடுகிறார்கள்
அதிகாரி போல
பிள்ளைகள்....!

துளிர்விட்ட
முதியோர்இல்லங்கள்
இனியும் வேண்டாம்
அப்பாவாகப்போகும்
அப்பாக்களே
எடுத்துச் சொல்லுங்கள்
கருவறையை தட்டி...

--

ஞா.முனிராஜ்,
அருப்புக்கோட்டை,
9842787603

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்**
**பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
டணாணாணீ://ட்ச்டிணணாடச்ணூடுச்டூ.ட்ச்ணணச்டி.டிண

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில்).

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு.

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்.

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது.

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு.

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்.

சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்

பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்.

நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி.

குழாய் பதிக்கும் பணி.

விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு.

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு.

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal

ThiravukolMagazine